**செய்தி வெளியீடு எண்: 627** **நாள்:24.09.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
(ச.மு.வ.–2)

2019 செப்டம்பர் மாதம் 25 முதல் 27 வரை உகாண்டா நாட்டின் தலைநகர் 'கம்பாலா' நகரில் நடைபெறவிருக்கும் 64–வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் தமிழகக் கிளையின் பிரதிநிதியாக மாண்புமிகு பேரவைத்தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் கலந்து கொள்கிறார். திரு. கி. சீனிவாசன், சட்டமன்ற செயலாளர் அவர்கள் இம்மாநாட்டில் நடைபெறும் Society of Clerks at-the-Table (SOCATT) கூட்டங்களில் கலந்துகொள்கிறார்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களும் செயலாளர் அவர்களும் மேற்குறிப்பிட்ட மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 25.09.2019 (புதன்கிழமை) அன்று அதிகாலை 03.30 மணிக்கு கத்தார் ஏர்வேஸ் விமானம் (QR - 529) மூலம் டோகா சென்று அங்கிருந்து கம்பாலா நகருக்கு சென்றடையவுள்ளனர்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களும் செயலாளர் அவர்களும் மேற்குறிப்பிட்ட மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு 11.10.2019 (வெள்ளிக்கிழமை) அதிகாலை 2.10 மணியளவில் கத்தார் ஏர்வேஸ் விமானம் (QR - 528) மூலம் சென்னை வந்தடைகின்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**